தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

FRANCE TEDC -FRANCE

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

FRANCE TEDC -FRANCE

## 2024

## வளர்தமிழ் 7

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

FRANCE TEDC -FRANCE
FRANCE TEDC -FRANCE

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. இறைநெறிப் பொதுமைக் காப்பியம் என அழைக்கப்படுவது

அ ) குண்டலகேசி ☐ ஆ ) சிலப்பதிகாரம் ☐

இ ) திருவாசகம் ☐ ஈ ) திருவிசைப்பா ☐

2. பனுவல் என்பது

அ ) நூல் ☐ ஆ ) ஆற்றல் ☐

FRANCE TEDC -FRANCE

இ ) சொல் ☐ ஈ ) மொழி ☐

3. பெண்கள் தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து எடுக்கின்றனர். பெண்கள் என்ற சொல் குறிக்கும் இடம்

அ ) தன்மை ☐ ஆ ) முன்னிலை ☐

இ ) படர்க்கை ☐ ஈ ) ஒருமை ☐

4. சாமப்பண் பாடி இறைவனை மகிழ்வித்தவன்

அ ) அதியர்மான் ☐ ஆ ) இராவணன் ☐

இ ) பாவேந்தர் ☐ ஈ ) பாரி ☐

FRANCE TEDC -FRANCE

5. வெண்ணிறம் என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

அ ) வெண்மை + நிறம் ☐ ஆ ) வெண் + நிறம் ☐

இ ) வெந் + நிறம் ☐ ஈ ) வெண் + ணிறம் ☐

6. வினாப்பொருளை உணர்த்தாத சொல்

அ ) யார் ☐ ஆ ) இங்கே ☐

இ ) அவனா ☐ ஈ ) நீயோ ☐

7. முகத்தில் சிறிது மாறுபாடு காட்டினாலே விருந்தினர் உள்ளம் ____________ ப் போல் வாடிவிடும்.

அ ) அல்லிப்பூ ☐ ஆ ) முல்லைப்பூ ☐

இ ) அனிச்சம்பூ ☐ ஈ ) மல்லிகைப்பூ ☐

8. ஆயர் என்பதன் எதிர்ப்பாற்சொல்

அ ) ஆய்ச்சியர் ☐ ஆ ) விறலியர் ☐

FRANCE TEDC -FRANCE

இ ) குறத்தி ☐ ஈ ) புலத்தி ☐

9. **குறள்:**

யாகாவா ராயினும் ____________ காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

அ ) தோள்காக்க ☐ ஆ ) உயிர்காக்க ☐

இ ) புலன்காக்க ☐ ஈ ) நாகாக்க ☐

10. உலகின் முதல் மாந்தன் தோன்றிய இடம்

அ ) ஐரோப்பாக்கண்டம் ☐ ஆ ) அமெரிக்காக்கண்டம் ☐

FRANCE TEDC -FRANCE

இ ) குமரிக்கண்டம் ☐ ஈ ) அந்தாட்டிக்கண்டம் ☐

11. அம்பு ஒத்த சொல் என்ற உவமைத் தொடரின் உவமானம்

அ ) அம்பு ☐ ஆ ) ஒத்த ☐

இ ) சொல் ☐ ஈ ) விரைவு ☐

12. பின்வருவனவற்றுள் சுட்டெழுத்துகள்

அ ) அ,இ,உ ☐ ஆ ) அ,இ,ஈ ☐

இ ) எ,ஏ,யா ☐ ஈ ) எ,யா,உ ☐

13. குழலி அண்ணனோடு சேர்ந்து படித்தாள். இச் சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு

அ ) ஐ ☐ ஆ ) கு ☐

இ ) இல் ☐ ஈ ) ஓடு ☐

14. மலர்ந்திருந்தன என்பது

FRANCE TEDC -FRANCE

அ ) ஆண்பால் ☐ ஆ ) பெண்பால் ☐

இ ) பலவின்பால் ☐ ஈ ) ஒன்றன்பால் ☐

15. வன்னியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் ________ இனத்துக்கு உரியவை.

அ ) ஆரிய ☐ ஆ ) திராவிட ☐

இ ) ஐரோப்பிய ☐ ஈ ) அரேபிய ☐

16. உலகின் முதன்மொழி தமிழ் என்று நிறுவியவர்

அ ) விபுலாநந்தர் ☐ ஆ ) தேவநேயப்பாவாணர் ☐

FRANCE TEDC -FRANCE

இ ) பாரதியார் ☐ ஈ ) கபிலர் ☐

17. தமிழில் உள்ள சார்பெழுத்துகள்

அ ) 247 ☐ ஆ ) 18 ☐

இ ) 217 ☐ ஈ ) 40 ☐

18. இலங்கையின் ஆதிக்குடிகள்

அ ) இயக்கர், போர்த்துக்கேயர் ☐ ஆ ) இயக்கர்,நாகர் ☐

இ ) இயக்கர், பறங்கியர் ☐ ஈ ) இயக்கர்,சிங்களவர் ☐

19. மகரந்தப் பொடியை முகமெங்கும் பூசியபடி கதிரவனை நோக்கித் தவம் கிடக்கும் பூ

அ ) சூரியகாந்திப்பூ ☐ ஆ ) தாமரைப்பூ ☐

இ ) அல்லிப்பூ ☐ ஈ ) மல்லிகைப்பூ ☐

20. ஒருவர் செய்த நன்றியை மறப்பது

FRANCE TEDC -FRANCE

அ ) நன்று ☐ ஆ ) சிறந்தது ☐

இ ) நன்றன்று ☐ ஈ ) நல்லது ☐

21. பின்வருவனவற்றுள் எதிர்மறை வினைச்சொல்

அ ) செல்கின்றான் ☐ ஆ ) சென்றான் ☐

இ ) சென்றிலன் ☐ ஈ ) செல்வான் ☐

22. நீங்கள் + கு

அ ) உனக்கு ☐ ஆ ) எங்களுக்கு ☐

இ ) எனக்கு ☐ ஈ ) உங்களுக்கு ☐

FRANCE TEDC -FRANCE

23. குறைவினைக்கு எடுத்துக்காட்டு

அ ) ஓடிய ☐ ஆ ) ஓடுதல் ☐

இ ) ஓடு ☐ ஈ ) ஓடியது ☐

24. சுவாமி வேதாசலம் என்ற இயற்பெயரைக் கொண்டவர்

அ ) தனிநாயகம்அடிகள் ☐ ஆ ) மறைமலைஅடிகள் ☐

இ ) தாவீதுஅடிகள் ☐ ஈ ) இளங்கோஅடிகள் ☐

25. சிறுமி அழகான ஆடைகளை நேர்த்தியாக அணிந்திருந்தாள். இங்கு வந்துள்ள செயப்படுபொருள் அடைமொழி

அ ) அழகான ☐ ஆ ) சிறுமி ☐

இ ) ஆடைகள் ☐ ஈ ) நேர்த்தியாக ☐

26. 'தேம்பாவணி' என்ற கிறித்தவ இலக்கியத்தைத் தந்தவர்

அ ) நாவலர் ☐ ஆ ) உருத்திரமூர்த்தி ☐

FRANCE TEDC -FRANCE

இ ) வீரமாமுனிவர் ☐ ஈ ) கல்லடிவேலுப்பிள்ளை ☐

27. பல்வேறு நாடுகளிலும் தமிழர் வாழ்கின்றனர். ________________ இன்றுவரை அவர்களுக்கென்று ஒரு நாடில்லை.

அ ) ஆகையால் ☐ ஆ ) ஆனால் ☐

இ ) எனவே ☐ ஈ ) அதனால் ☐

28. ஈட்டல் என்பதன் எதிர்ச்சொல்

அ ) சேர்த்தல் ☐ ஆ ) சேமித்தல் ☐

இ ) இழத்தல் ☐ ஈ ) உவத்தல் ☐

FRANCE TEDC -FRANCE

29. ________________ வரவால் கடல் பொங்கும்.

அ ) கதிரவனின் ☐ ஆ ) மதியின் ☐

இ ) விண்மீனின் ☐ ஈ ) வெய்யோனின் ☐

30. படித்தாள் என்பதன் விகுதி

அ ) படி ☐ ஆ ) த் ☐

இ ) தாள் ☐ ஈ ) ஆள் ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

நாம் பல திறமைகளை உடையவர்களாக இருப்பினும் எம்மை வழி நடத்திச் செல்வதற்கு ஒரு துணை வேண்டும். அதற்கு எமது பெற்றோர், ஆசிரியர் போன்றோர் வழிகாட்டியாக இருப்பர். எழுதுபவர் நினைக்கும் வழி செல்லும் கரிக்கோல் போல நாமும் நல்ல வழிகாட்டலைப் பின்பற்றி நடக்க வேண்டும். வாழ்வில் வெற்றிபெற முயலும்போது தோல்விகளும் துன்பங்களும் ஏற்படுகின்றன. அப்பொழுது நாம் அவற்றைத் தாங்கிக்கொண்டு முன்னேறும் வழியைத் தேட வேண்டும். நாம் தோல்விகளைக் கண்டு துவண்டுபோகக் கூடாது. எமது ஆளுமையை வளர்த்துக் கொள்ள நாம் நல்லொழுக்கம், அறிவு என்பவற்றை விருத்திசெய்ய வேண்டும். நாம் செய்யும் நற்செயல்களே வாழ்நாள் முழுவதும் எமக்கு அடையாளமாக அமையும்.

FRANCE TEDC -FRANCE

1. கரிக்கோலைப் போல நாமும் எதைப் பின்பற்றி நடக்க வேண்டும்?

_______________________________________________

2. எமது ஆளுமையை வளர்த்துக்கொள்ள நாம் எவற்றை விருத்தி செய்ய வேண்டும்?

_______________________________________________

FRANCE TEDC -FRANCE

3. எவை வாழ்நாள் முழுவதும் எமக்கு அடையாளமாக அமையும்?

_______________________________________________

4. எமக்கு வழிகாட்டியாக இருப்பவர்கள் யாவர்?

_______________________________________________

5. நாம் எவற்றைக் கண்டு துவண்டுபோகக் கூடாது?

_______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. விபுலாநந்த அடிகள் எழுதிய மிகச்சிறந்த நூல் எது?

2. கயிலைவன்னியனது ஆட்சி எதுவரை பரந்திருந்தது?

FRANCE TEDC -FRANCE

3. ஏரடிக்கும் சிறுகோலால் தரணி ஆள்பவர் யார்?

4. சினங்காத்தல் பற்றிக் கூறும் திருக்குறளின் அதிகாரம் எது?

5. தமிழர் கலைகளை எத்தனையாக வகுத்தனர்?

FRANCE TEDC -FRANCE

6. விருந்தோம்பல் பற்றிக் கூறும் நூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

7. கண் இமைக்காமல் நித்திரை கொள்ளாமல் காவல் புரிபவன் யார்?

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

# உயர்ந்திடுவோம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்றாய் | வழியே | சேர்ந்திடுவோம் | வாழ்வை | களைந்திடுவோம் |

FRANCE TEDC -FRANCE

பெற்றோரை நாம் பேணிடுவோம்

கற்றோருடன் ________________

அறம் யாவும் கற்றிடுவோம்

அதன் ________________ நடந்திடுவோம்

நன்றும் தீதும் அறிந்திடுவோம்

நாளும் ________________ இணைந்திடுவோம்

குறைகள் யாவும் ________________

குணத்தால் உயர்ந்து சிறந்திடுவோம்

FRANCE TEDC -FRANCE

தமிழர் ________________க் கடைப்பிடிப்போம்

தரணி போற்ற வாழ்ந்திடுவோம்

புள்ளிகள் 05

**5) அ) பந்தியை வாசித்து, இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.**

**அது ஒரு சின்னஞ்சிறிய ஊர். அங்கே பார்க்கும் இடமெல்லாம் பசுமை நிறைந்த மரங்களும் வயல்களும் காணப்படுகின்றன. வயல்களின் நடுவே பெரிய குளம் இருக்கிறது. அக்குளத்தில் அழகான அல்லிமலர்கள் மலர்ந்திருக்கின்றன. குளத்தைச் சுற்றி உள்ள செடிகளில் வண்ணவண்ணப் பூக்கள் பூத்து நறுமணம் வீசுகின்றன. மலர்ந்த பூக்களில் வண்ணத்துப்பூச்சிகள் தேனைக் குடிக்கின்றன.**

1. இடப்பெயர் ஒன்று தருக.

FRANCE TEDC -FRANCE

______________________________

2. அடுக்குத்தொடர் ஒன்று தருக.

______________________________

3. இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல் ஒன்று தருக.

______________________________

4. பெயரெச்சம் ஒன்று எழுதுக.

______________________________

5. குளத்தில் அழகான அல்லிமலர்கள் மலர்ந்திருக்கின்றன. இச் சொல்லியத்தின் எழுவாய் எது?

FRANCE TEDC -FRANCE

______________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. மேய்கின்றன என்ற சொல்லின் எண், இடம், காலம் என்பவற்றைத் தருக.**

| | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|
| மேய்கின்றன | | | |

புள்ளிகள் 03

**2. தரப்பட்டுள்ள சொற்களுடன் கு, ஐ ஆகிய உருபுகளைச் சேர்த்து எழுதுக.**

| | கு | ஐ |
|---|---|---|
| பெற்றோர் | | |
| நண்பன் | | |

FRANCE TEDC -FRANCE

புள்ளிகள் 02

**6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

தாலம் தாளம் வழி வலி மணம் மனம்

ஈகி திலீபனின் நினைவு நாள் நிகழ்வு நடைபெறுகின்றது. அங்கே மலர்கள் வைக்கப்பட்டிருந்தன. மலர்களின் ______________ எங்கும் பரவுகின்றது. மக்கள் மலர்தூவி வணக்கம் செய்கின்றனர். இசை நிகழ்வு தொடங்கியது. சிறுவர்கள் ______________ உருகிப் பாடிக் கொண்டிருக்கின்றனர். அதைக்கேட்டு சிலர் ______________ போடுகின்றனர். மண்டபத்திற்குச் செல்லும் ______________ எங்கும் திலீபனின் நிழற் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. மக்கள் ______________ தோய்ந்த முகத்துடன் இருக்கின்றனர்.

FRANCE TEDC -FRANCE

புள்ளிகள் 05

**7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

உறவினர், நண்பர்கள் வீட்டுக்கு வந்தால் வணக்கம் கூறி வரவேற்போம். இனிய மொழியில் பேசி மகிழ்விப்போம். அவர்களுக்குப் பிடித்த உணவுகளை உண்ணக் கொடுப்போம். எப்போதும் உறவினர்கள், நண்பர்கள், அயலவருடன் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்வோம்.

FRANCE TEDC -FRANCE

FRANCE TEDC -FRANCE

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள சொற்களை வைத்து, பழமொழிகளைப் பொருத்தமாக எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| தெய்வம் | வேந்தன் | தனிமரம் | திரவியம் | சொல் |

1. துறவிக்கு ____________________ துரும்பு.

FRANCE TEDC -FRANCE

2. திரைகடல் ஓடியும் ____________________ தேடு.

3. ____________________ தோப்பாகாது.

4. மூத்தோர் ____________________ வார்த்தை அமிழ்தம்.

5. செய்யுந் தொழிலே ____________________.

FRANCE TEDC -FRANCE

புள்ளிகள் 05

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- விருந்தோம்பல்
- தலையைக்காத்த தமிழ்
- விளையாட்டுகள்
- நான் கண்ட கனவு

FRANCE TEDC -FRANCE

புள்ளிகள் 15

FRANCE TEDC -FRANCE

FRANCE TEDC -FRANCE

FRANCE TEDC -FRANCE